செ.வெ.எண்: 07 நாள்: 04.11.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் சுமார் ரூ.50.35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டப் பணிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் 03.11.2016 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் ஆய்வு செய்து கூறியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து பொது மக்களும் பயன் பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அரசுத் துறைகளின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதன்படி புதுக்கோட்டை நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.48.16 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பாதாள சாக்கடை திட்டம், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணியினையும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கைவாசல் ஊராட்சி, திருவேங்கைவாசல் அன்னத்து ஊரணியில் பசுமை போர்வை திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ள மரப்போத்துகள் பணியினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் அன்னவாசல் வட்டாரம், நக்கீரர் வயலில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் ரூ.10.12 லட்சம் (50%) மானியத்தில் அமைக்கப்பட்ட செரி தக்காளி பசுமைக் குடில் பணியினையும், பெருமாநாடு கிராமத்தில் ரூ.10.12 லட்சம் (50%) மானியத்தில் அமைக்கப்பட்ட வீரிய ஒட்டு வெள்ளரி பசுமைக் குடில் பணியினையும், குடுமியான்மலை ஸ்டாமின் வளாகத்தில் ரூ.1,99,73,000/- புதிதாக கட்டப்பட்டு வரும் மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை மைய பயிற்சி கட்டிடத்தின் கட்டுமானப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் ஸ்டாமினில் செயல்பட்டு வரும் நுண்ணூட்ட கலவை உற்பத்தி மையம், உயிர் உர உற்பத்தி மையம், மண் பரிசோதனை ஆய்வகம், மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் போன்றவை நேரில் பார்வையிட்டு உற்பத்தி முறைகள் குறித்து அலுவலர்களிடம் விளக்கமாக கேட்டறியப்பட்டது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ. 50,35,97,000/- மதிப்பீட்டில் பல்வேறு துறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சி திட்டப் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் போது தமிழக அரசின் வேளாண் திட்டங்களை விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைக்கவும், மரப்போத்துகளை தினமும் நீர் ஊற்றி பராமரிக்கவும், மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை மைய பயிற்சி கட்டிடத்தின் கட்டுமானப்பணிகளை விரைவாக முடிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து துறைகளிலும் தமிழக அரசின் வளர்ச்சித் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் திரு.பி.அண்ணாமலை,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

முன்னதாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் மற்றும் கண்காணிப்பு அலுவலர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர் திருவேங்கைவாசல் அன்னத்து ஊரணியில் மரபோத்து மற்றும் குடுமியான்மலை அரசு தோட்டக்கலை பண்ணையில் மரக்கன்றுகளை நட்டார்கள்.

இந்த ஆய்வில் வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு. அருணாச்சலம், உதவி இயக்குநர் திருமதி.ருக்குமணி உள்ளிட்ட அரசு அலுவலர் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**